3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) வணிக வரி மற்றும் பதிவுத் துறை அலுவல்களைக் கணினிமயமாக்கல், அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வணிகர் நல வாரியத்திற்குத் தொகுப்பு நிதி அதிகரித்தல் மற்றும் தனி முத்திரைச் சட்டம் இயற்றுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் 5 அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அதிக அளவு நிதி ஆதாரங்களை திரட்டுவதில் வணிக வரித் துறையும், பதிவுத் துறையும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இப்படிப்பட்ட இன்றியமையாத் துறைகளின் பணிகளை எளிதாக்கும் வண்ணம், இத்துறைகளின் அலுவல்களை கணினிமயமாக்கவும், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டவும் எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

இந்தவகையில், கடந்த ஆண்டு 15 இடங்களில் உள்ள 34 அலுவலகங்களுக்கு 20 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்ட எனது தலைமையிலான அரசு ஆணையிட்டது. நடப்பாண்டில், ராணிப்பேட்டை, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 10 இடங்களில் உள்ள 16 வணிக வரி அலுவலகங்களுக்காக 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

வணிகர்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்திவரும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராவதற்கான சில நிபந்தனைகளை எனது தலைமையிலான அரசு தளர்த்தியுள்ளதையடுத்து, இவ்வாரியத்தின்

2012 மே 15] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளதைக் கருத்தில் கொண்டு, அரசால் வழங்கப்படும் தொகுப்பு நிதி 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதேபோன்று, பாரம்பரியம் மிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்தில் கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டுக் காலத்திற்குள் சொந்தக் கட்டடங்களைக் கட்ட எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதன் அடிப்படையில், முதற்கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் 52 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு கடந்த ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்ட நான் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளேன். இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டு 2012-2013-ல் தென் சென்னை, செங்கல்பட்டு, அரக்கோணம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், நாமக்கல், தருமபுரி, அரியலூர், மயிலாடுதுறை, சேரன்மகாதேவி, மார்த்தாண்டம், பழனி, இராமநாதபுரம், கும்பகோணம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 17 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த ஒருங்கிணைந்த வளாகங்களில் மட்டும் 27 சார் பதிவாளர் அலுவலங்கள் அமையப்பெறும். மேலும் கோவையில் கட்டப்படும் ஒருங்கிணைந்த வளாகத்தில் துணைப் பதிவுத் துறை தலைவர் அலுவலகம், மண்டல உதவி பதிவுத் துறைத் தலைவர் மற்றும் மாவட்ட பதிவாளர் (புலனாய்வு) அலுவலகங்களுக்கான கட்டடங்களும் இடம்பெறும். இந்த 27 சார் பதிவாளர் அலுவலகங்கள் மட்டுமல்லாது, மேலும் 48 சார் பதிவாளர் அலுவலகங்களுக்குத் தனித்தனியாக சொந்தக் கட்டடம் கட்டப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)* இக்கட்டடப் பணிகள் அனைத்தும் 41 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் முத்திரைத் தீர்வையை விதிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் விகிதங்களுக்காக தனியே முத்திரைச் சட்டத்தினை இயற்றியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் மத்திய சட்டமான 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம்தான் பின்பற்றப்படுகிறது. இதன்விளைவாக, பொதுமக்கள் நலன் கருதி மாநில அரசு ஏதாவது மாற்றம் செய்ய விரும்பினால், அதற்கான சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது. இந்தக் காலதாமதத்தினைத் தவிர்க்கும்வகையில், நமது மாநிலத்திற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் வழிகாட்டி மதிப்பின் உயர்வினால் ஏழை, எளிய மக்கள் பாதிக்காதவண்ணம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) தகவல் தொழில்நுட்பவியல் துறையில் சேவை விளக்கக் கோப்பகம், புதிய கண்காணிப்பு மென்பொருள் மற்றும் பாதுகாப்புத் தணிக்கை வசதிகள் அளிப்பது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகவல் தொழில் நுட்பவியலில் இந்தியாவில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்வதற்கு, 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கைதான் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

அரசுத் துறைகள் பல்வேறு சேவைகளை மக்களுக்கு இணையம்மூலம் வழங்கி வருகின்றன. இந்த இணைய சேவைகள் அனைத்தும் தற்போது அந்தந்தத் துறைகளின் வலைத் தளங்களின்மூலம் அளிக்கப்படுகின்றன. பல்வேறு சேவைகளுக்கான இணையதள முகவரிகளை பொதுமக்கள் நினைவில் வைத்துக்கொள்வது கடினமானது ஆகும். இதனைத் தீர்க்கும் வகையில், அரசின் அனைத்து சேவைகள் பற்றிய விவரங்கள்